## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

## அசல் வழக்கு எண்.254/2015

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.S.சுசீலா,பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நஞ்சையன் | வட்டம் | : | சத்தியமங்கலம் |
| த/பெ. | : | லேட்.கெம்பண்ணகவுண்டர் | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | துண்டன்சாலை | வயது | : | 77 |

**பி.வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் 1-ம் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 19.09.1980 தேதிய விடுதலை ஆவணப் பத்திர எண்.2055/1980-ன் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும், 22.07.1975-ம் தேதிய நில உடைமைக் குறிப்பேடு விவரம் அசல் **பி.வா.சா.ஆ.2** ஆகவும், கந்தாய ரசீதுகள் (எண்ணிக்கை 13) அசல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும், 23.10.2015 தேதிய கெம்பணகவுண்டர் பெயரிலுள்ள பட்டா எண்.65 -ன் கணினி நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும், 31.08.2017 ம் தேதிய பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திர எண்.4380/2017-ன் சான்று நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகவும், 26.07.2023-ம் தேதிய கண்ணம்மாள் பெயரிலுள்ள பட்டா எண்.840-ன் கணினி நகல் **பி.வா.சா.ஆ.6** ஆகவும், 20.08.2024-ம் தேதிய நஞ்சையன் மற்றும் பிரகாஷ் பெயரிலுள்ள 841 எண் கொண்ட பட்டா கணினி நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகவும், 20.08.2024 ம் தேதிய பிரகாஷ் பெயரிலுள்ள 842 எண் கொண்ட பட்டா கணினி நகல் **பி.வா.சா.ஆ.8** ஆகவும், 20.08.2024 பிரகாஷ் பெயரிலுள்ள புல எண்.335/2-ன் அ-பதிவேடு கணினி நகல் **பி.வா.சா.ஆ.9** ஆகவும், 20.08.2024 பிரகாஷ் பெயரிலுள்ள புல எண்.335/3-ன் அ-பதிவேடு கணினி நகல் **பி.வா.சா.ஆ.10** ஆகவும், 20.08.2024 நஞ்சையன் மற்றும் பிரகாஷ் பெயரிலுள்ள புல எண்.172/4-ன் அ-பதிவேடு கணினி நகல் **பி.வா.சா.ஆ.11** ஆகவும், 20.08.2024 கண்ணம்மாள் பெயரிலுள்ள புல எண்.340/5-ன் அ-பதிவேடு கணினி நகல் **பி.வா.சா.ஆ.12** ஆகவும், 20.08.2024 பிரகாஷ் பெயரிலுள்ள புல எண்.172/6-ன் அ-பதிவேடு கணினி நகல்

**பி.வா.சா.ஆ.13** ஆகவும், 20.08.2024 கண்ணம்மாள் பெயரிலுள்ள புல எண்.340/8-ன் அ-பதிவேடு கணினி நகல் **பி.வா.சா.ஆ.14** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.10.24 17:23:54 +0530

District Munsif